(1) பக்கங்களின் எண்ணிக்கை 17 — 33

(2) புதுக்கித் திருப்பிய நாள்

(3) ஆதாரங் குறிப்பவர் சுருக்கொப்பம்

# தமிழ்நாடு ஆவணக் காப்பகம்.

தமிழ்நாடு அரசு

பொது துறை

அரசாணை எண். 83

மு. கோப்புத் தாள் எண்.

அச்சகம்

பலவகை

நாள்: 24—1—1889

199

மடிக்கவோ கண்டபடி கையாளவோ கூடாது.

ஆவண. கா. 1—18,006—6-9-90.

I/25/1/89. Fr. C. No. 306/89



ORDINARY, MS.

Public DEPARTMENT.
G.O., DATED 24. 1. 89
No. 83.

*When given for copying* 23/1

[Despatch Abstract.]

Tamil version of Dr. Furnell's Lecture on "Water and its uses"

Back Paper, No. of 188

Further Paper, No. of 188

Read again Order of Government, dated 188 , No. , Miscellaneous.

Diwan Regent of Pudukota

desp 24/1/89

Enclosures.

Current No. 4212 — C.C. the Diwan's letter

Statement with ditto.

Order of Government .. .. .. A A

Statement with ditto.

Papers not filed up, being meant for despatch in original (not paged).

N.B.—
A = Copy in full.
B = Not to be copied.
P = Copy abstract only.
Q = Copy heading only.

---

R. 13-6-82 – 453 A
26-9-82 – 1049
9-1-83 – 30
21-4-83 – 323
6-6-83 –

A.m.

Order 24-1-89. No. 83
Res
26 Jan

The Diwan Regent of Pudukota will be informed that the Tamil version of the Lecture on Water is no longer available in the Govt. Press; but there is no objection to ~~his reprinting~~ that being reprinted a thousand copies ~~for distribution to the public~~ for the Pudukota State

18/1
19/1

To the Diwan Regent Pudukota } desp 24/1/89

R. 13-6-82-453 A
26-9-82-1049

Note. A copy of the Tamil version with the correspondence on the subject is put up. The English lecture was printed by Mr. Higginbotham, the Tamil and Telugu versions by Govt. The pamphlets were printed for gratuitous distribution and there is no indication that the copyright in them belongs to or has been reserved by anybody.

C. 21/1

---

[ 9 ] Department.

From

The Superintendent,
Government Press

No. 3030.

Dated 5/12/88
Received
Enclosures

SUBJECT.

Transferring a letter from Mr. R.R.Y. A. Sashiah Sastri, Diwan Regent of Pudukota, enquiring if copies of Tamil translation of Dr. Furnell's lecture on Water & its uses are available for sale.

undertake to reprint it for the State use of this State

I have the honor to be,

Sir,

Your most obedt. Servt.

[illegible]

Dewan Regent.

C. P. [illegible] 3030

Transferred to the Public Depot [illegible]

[illegible]

R Hill

Dewan's office,
Pudukota 2nd Nov 1882

No 1112

From

A Sashiah Sastri CSI
Dewan Regent of Pudukota

To

The Superintendent
Govt Press Fort St George

Sir,

I have the honor to request the favor of your letting me know if copies of the Tamil Translation of "Dr Furnell's Lecture* on Water & its uses" are available for sale, and if so, how many and at what price. I shall require 1000 copies. If not available, I beg to be informed if you would kindly undertake

* Delivered in Patchyappa's Hall on the 1st of April 1882

"நாஷனல் இந்தியன் அசோஸியேஷன்"
என்னும் சங்கத்தைச்சேர்ந்த
மதராசு உப சபையாரால்
அச்சடிக்கப்பட்ட
1882வுல் ஏப்ரல்மூ 1வ பச்சையப்ப முதலியார் மாளிகையில்
டாக்ட்டர் வர்னல் துரையவர்கள்
ஆங்கிலேய பாஷையில் செய்த
பிரசங்கத்தின் மொழிபெயர்ப்பு.

விஷயம்:

தண்ணீரைப்பற்றியும்

அதினால் ஜனசௌக்கியத்துக்கு நேரிடும்
குணங்களைப்பற்றியும்.

MADRAS:
PRINTED BY E. KEYS, AT THE GOVT. PRESS.
1882.

“ நாஷனல் இந்தியன் அசோஸியேஷன் ”

என்னும் சங்கத்தைச்சேர்ந்த

மதராசு உப சபையாரால்

அச்சடிக்கப்பட்ட

1882௵ ஏப்ரல்௴ 1௳ பச்சையப்ப முதலியார் மாளிகையில்

டாக்டர் வர்னல் துரையவர்கள்

ஆங்கிலேய பாஷையில் செய்த

# பிரசங்கத்தின் மொழிபெயர்ப்பு.

---

விஷயம்:

## தண்ணீரைப்பற்றியும்

அதினால் ஜனசௌக்கியத்துக்கு நேரிடும்
குணங்களைப்பற்றியும்.

---

MADRAS:
PRINTED BY E. KEYS, AT THE GOVT. PRESS.

1882.

# தண்ணீரைப்பற்றி பிரசங்கம்.

ஐயா சபாதிபரே, மற்றிங்குவந்திருக்கும் பிரபுக்களே, சீமாட்டிகளே, கேளுங்கள்.

பான்த்திற்குபயோகமான ஜலத்தைப்பற்றியும், அதற்கும் ஜன சௌக்கியத்துக்குமிருக்கிற சம்பந்தத்தைப்பற்றியும், இப்பொழுது நான் சிலவிவரங்களை வெளிப்படையாயும், அனுபவத்தை ஒட்டியும், சொல்ல உத்தேசித்திருக்கிறேன்.

இவ்வுலகத்தில் மனிதன் பிழைத்திருப்பதற்கு முக்கியாதாரமான பொருள்கள் - நிலம், நீர், நெருப்பு, காற்று இவைகளேயாம். இவற்றிற்குத்தான் பண்டு முன்னோர்கள் (ஆகாயத்தைச் சேர்த்து) பஞ்சபூதங்களென பேரிட்டிருந்தனர். இக்காலத்து சாஸ்திரங்களால் இவை ஒவ்வொன்றும் ஒரே மூலப்பொருளல்லவென்றும் சில வஸ்த்துக்கள்சேர்ந்து ஒன்றாய் தோன்றுகிறதென்றும் திருஷ்டாந்தமாய் தெரிந்தபோதிலும், (உட்பிரிவில்லாத மூலவஸ்த்துக்களென்றே பொருள் விளங்கத்தக்க) பஞ்சபூதங்களென்னும் பெயரே சாதாரணமாய் வழங்கிவந்திருக்கிறது. காற்றில்லாவிடில் மனிதன் வெகுநேரம் ஜீவித்திருக்கமாட்டான் - இரண்டு நிமிஷகாலம் காற்றில்லாமற்போனால், நம்மில் மிகுந்தபலசாலியும் மடிந்துபோவான். இந்த தேசத்தில் விஷக்காற்றினாலுண்டாகிற சில நோய்கள்தவிர, மற்றப்படி சாதாரணமாய் ஐரோபாதேசங்களில் கெட்ட காற்றினால் விளையும் தீங்குகள் இங்கில்லை - இது உஷ்ணராச்சியமானபடியால் நம்முடைய கதவுகளையும் ஜன்னல்களையும் திறந்துவைத்து பரிசுத்தமான காற்றை நாம் நன்றாய் அனுபவிக்கும்படி யிருக்கிறது. இப்படியிருப்பது வாஸ்தவத்தில் நமக்கு அற்பமான பிரயோசனமல்ல.

பூமியை நாம் மிகவும் சிறப்பாக தாய் என்றழைத்து வருகிறோம் - பூமியில்லாவிட்டால் நாம் ஜீவிப்பது அசாத்தியமென்று நமக்கு தெரிந்தவரையில் காணுகிறது - செழித்த பிரதேசத்தில் மிக்கவாறும் செல்வமும், சுகமும், நாகரீகமும் உண்டாயிருக்கும் - செழிப்பில்லாத கட்டாந்தரையிலோ சரீர கஷ்டமும், (மேற்கண்ட செல்வத்துடன் ஒத்து பார்க்கும்போது) வறுமையும், பலவிடங்களில் நாகரீகமின்மையும் காணும் - நெருப்பை கெட்ட யஜமானனென்றும் நல்ல வேலைக்காரனென்றும் சொல்வார்கள். அதுவும் மனிதனுடைய க்ஷேமத்துக்கு அத்

தியாவசியமானதாயிருக்கிறது. இன்று நான் ஜலத்தைப்பற்றியே பிரசங்கம் பண்ணப்போகிறேன். அது பஞ்சபூதங்களில் பூமி காற்று இவ்விரண்டிற்கும் பின் மற்றவைகளுக்குள் இத்தேசத்தில் மனிதனுடைய சுகத்துக்கு முக்கியாதாரமானதென்று சொல்லலாம். சாதாரணமாய்ப் பார்ப்பவர்களுக்கு ஜலம் சமகுணமுள்ள ஒரே பிரிக்கக்கூடாதபொருளாக காணுகிறது. ஆனால் அது வாஸ்தவத்தில் இரண்டு வாயுக்கள் கூடியது - இவ்விஷயம் உங்களுக்கு தெரிந்திருக்கலாமென்பதில் எனக்கு சந்தேகமில்லை. அவ்விரண்டு வாயுக்களுக்கும் அங்கிலேய பாஷையில் ஆக்ஸிஜன், ஹைட்ரிஜன் என்றுபெயர் - இவைகளை எளிதான ஒரு பரிசோதனையினால் தண்ணீரில் நின்று பிரித்தெடுத்தும் மறுபடியும் தண்ணீராக்கியும் காட்டலாம் - ஆயினும் இப்போது நான் பேசுவதற்குள்ள சொற்பகாலத்தில் ஜலத்தின் சொரூபத்தைப்பற்றி விசேஷமாய் பிரஸ்தாபித்து பொழுதுபோக்க எனக்குமனமில்லை. அது என்வேலையுமல்ல. ஜலமானது சரீரசௌக்கியத்துக்கு சம்பந்தப்பட்டிருக்கிற அம்சங்களைப்பற்றிமாத்திரம் நான் பேசவிரும்புகிறேன்.

### "ஜன சங்கியைப்பற்றியும் பெருந் தொத்துநோய்களைப் பற்றியும்."

மகா கண்டங்களில் ஒன்றைப்போன்ற மிகவும் பெரிதாகிய இந்த இந்தியாதேசத்தில் வாந்திபேதி, ஜுரம், அம்மைமுதலிய சில பயங்கரமான கொடிய தொத்துவியாதிகள் அடிக்கடி உண்டாய்க்கொண்டிருக்கின்றன. இவைகளில் மரணத்தை பெரும்பான்மை விளைவிப்பது ஜுரந்தான் - சென்ற 1879ம் ௵த்தில் இந்தியாதேசத்திலெல்லாம் 50 லக்ஷம் ஜனங்கள் இறந்திருக்கிறார்கள் அவர்களில் 35 லக்ஷம் பெயர்கள் ஜுரத்துக்கும், 2,65,000 பெயர்கள் வாந்திபேதிக்கும் இரையாயினர் - சில வருஷங்களிலிதைவிட அதிக ஜன நஷ்டமுண்டாயிருக்கிறது.

நம்முடைய இராஜதானியிற்சேர்ந்த பிரதேசங்களில் மட்டும், 1879௵த்தில் 5 லக்ஷம் ஜனங்களுக்கு மேலேயே மடிந்துபோயிருக்கிறார்கள். அவர்களில் 2,85,477 பெயர் ஜுரத்தாலும், 13,296 பெயர் வாந்திபேதியாலும் மாண்டார்கள். இவ்வாறுண்டாகும் ஜனச்சேதம் அநேகமாய் தடுக்கக்கூடியதே. அசுத்த ஜலத்தை உபயோகிப்பதாலேயே இவ்விதமரணங்கள் விசேஷமாயுண்டாகிறதென்று எனக்குறுதியாய்த்தோன்றுகிறது.

### "இராஜாங்கத்தைப்பற்றியும் ஜன சௌக்கிய பரிபாலனத்தைப்பற்றியும்."

இத்தேசத்தின் இராஜாங்கத்தார், தங்கள் ஆதீனத்திலிருக்கும் பிரஜைகளுடைய க்ஷேமத்தின்பொருட்டு அவர்களுக்கு சரீரசௌக்கியம் உண்டுபண்ணத்தக்க வியாபாரங்களில் சிலகாலமாய் சிரத்தையுள்ளவர்களா யிருக்கிறார்கள். இந்நாட்டில்



நான் பல உத்தியோகங்களை படிப்படியாயடைந்து கடையில் ஸானிடேரி கமிஷனரென்று பெயருள்ள ஜன சௌக்கிய சம்பந்தமான விஷயங்களை பரிசோதிக்கவேண்டிய உத்தியோகத்தைப் பெற்றேன் - அதற்காக நான் பலவிடங்களிலும் சஞ்சரித்து அங்கங்கு மறைந்திருக்கும் ஜன சௌக்கியத்துக்கு விரோதமான குற்றங்களை வெளிப்படுத்தி அப்போதிக்கப்போது கவரன்மெண்டாருக்கு தெரியப்படுத்தி அக்குற்றங்களை நீக்கத்தகுந்த உபாயங்களை என்னால் கூடியவரையில் உபதேசித்துக்கொண்டிருப்பது என்னுடைய தொழில்களில் ஒன்றாயிருக்கிறது - இப்படி நான் சஞ்சாரம்செய்யுங்கால் என் புத்தியில் ஒருவிஷயம்மட்டும் உறுதியாகப் பட்டிருக்கிறது. அதாவது வருஷவாரியில் மிகவும் ஜனச்சேதத்தை உண்டுபண்ணும் வாந்திபேதி, வயிற்றூளைவு, ஜுரம் முதலிய நோய்களுக்கு முக்கியகாரணம் அசுத்தஜலத்தின் உபயோகமென்பதேயாம் - இன்று இவ்விடத்தில் கூடியிருக்கிற இந்நகரத்து புத்திமான்கள் முன்பாக நான்பேசும் சில வெளிப்படையான பேச்சுகள் அவருக்குமாத்திரமன்றி இதர முக்கிய நகரங்களிலுள்ள விவேகிகளுக்கும் எட்டுமென்கிற நம்பிக்கை எனக்கிருக்கிறது. நான் ஆருடைய ஊழியக்காரனாய் இருக்கிறேனோ அப்படிப்பட்ட கவரன்மெண்டாருக்கும் அந்த கவரன்மெண்டார் ஆருடைய க்ஷேமத்துக்காக மனப்பூர்த்தியாகப் பாடுபடுகிறார்களோ அப்படிப்பட்ட ஜனங்களுக்கும் - இவ்விஷயத்தைப் பற்றி சில அம்சங்களை எடுத்துச்சொல்வதைவிட நான் செய்யத்தக்கது ஒன்றுமில்லை என்று நினைக்கிறேன்.

### "இந்தியாதேசத்தின் பிரஜைகளைப்பற்றியும் ஜலத்தைப் பற்றியும்."

ஆதிமுதல் இந்தியாதேசத்தார் ஜனசௌக்கியத்துக்குரிய ஏற்பாடுகளைச்செய்வதில், மற்றவியாபாரங்களி லிருந்தாப்போலவே, முதன்மையாயிருந்தவர்களாகையால், அவர்கள் மற்ற தேசத்தாரைவிட ஜலத்தின்விஷயத்தில் அதிக கவனம்வைக்கத்தக்கவர்களாயிருக்கிறார்கள். 1879௵த்தில் பியே பரிக்ஷைமுதலிய பரிக்ஷைகொடுத்தவருக்கு வெகுமதி கொடுக்கக்கூடிய கல்விச்சங்கத்தில் நான்செய்த பிரசங்கத்தில் இந்ததேசத்தாரே ஆதியில் முதல்வைத்தியர்களாக விருந்தார்களென்று வெளியிட்டிருக்கிறேன். இங்கிலாந்துதேசத்து ஜனங்கள் முற்றும் நாகரீகமின்றி மிருகப்பிராயமாய் சற்றுஏறக்குறைய நிர்வாணமாயே திரிந்துகொண்டிருந்தகாலத்தில் மகா பிராசீனராகிய இத்தேசத்தார் வைத்தியசாஸ்திரத்தை வெகுதூரம் பரிசோதித்தும் வைத்தியத்தொழிலை நடத்தியும் வந்திருந்ததுமன்றி, அக்காலத்திலேயே ஜலத்தை யுபயோகிக்கவேண்டிய விதத்தைப்பற்றியும் அதைப் பாதுகாக்கவேண்டிய விதத்தைப்பற்றியும் சிலவிதிகளை யேற்படுத்தியிருந்தார்கள். இதைப்பற்றி உங்களுடைய பூர்வீக தர்மசாஸ்திர கர்த்தாக்கள் அளவற்ற ஒழுங்குகளையும் விதிகளையும் உண்டுபண்ணி யிருந்தார்களென்று எனக்கு தெரியவருகிறது. அவைகளில் சிலவற்றை எடுத்துச்சொல்லுகிறேன்.

I. யஜுர் வேதத்தில் ஒருபாகமான ஆருணத்தில் அடியிற்கண்ட கட்டளைகளிருக்கின்றன.

"ஜலத்தில் ஒக்காளித்து துப்பாதே, மல மூத்திரங்களைத் தண்ணீரில் விடாதே. ஜலத்தில் இரத்தத்தைவிடாதே, மயிர், நகம், எலும்பு, சாம்பல் இவைகளை தண்ணீரில் எறியாதே. அழுக்கு வஸ்திரங்களை ஜலத்தில் நனைக்காதே ஏனென்றால் அப்படி செய்வது தேவதைகள் கொடுத்த மகா விலையுயர்ந்த பொருளை துர்விநியோகப்படுத்துவதும் அவர்களை யவமதிப்பதுமாகும்."

II. மேலும் ஜலத்தின் விநியோகத்தையும் துர்விநியோகத்தையும்பற்றி, தர்மசாஸ்திரக்காரர்களால் விதிக்கப்பட்ட விதிகளாகிய ஸ்மிருதிகளில் அடியிற்கண்டவை அடிக்கடி எடுத்து சொல்லப்பட்டிருக்கின்றன. எட்டுவிதமான ஜலத்தை பானஞ்செய்யக்கூடாதென்று யாக்ஞியவல்கியர் விதித்திருக்கிறார்.

(1) நமக்கு அறிமுகமில்லாத ஒருவன் காய்ச்சிய ஜலம்,
(2) நுரைக்கிற ஜலம் (இதனால் நாங்கள்குடிக்கிற ஸோடாத்தண்ணீருக்கு அவர் ஆக்ஷேபிப்பரென்று எண்ணவேண்டும்),
(3) தடிப்பான அழுக்கு ஜலம்,
(4) கெட்டநாற்றமுள்ள ஜலம்,
(5) குமிழியிட்டு கிளம்புகிற ஜலம்,
(6) சுடுகிற ஜலம்,
(7) மண்கலந்த ஜலம்,
(8) உப்பு ஜலம்.

அடியிற்கண்ட மனிதர்கள் குளித்தும் துணிகளைத்தோய்த்தும் அசுத்தப்படுத்திய ஏரியிலாவது, குளத்திலாவது, ஸ்நாநம்செய்யக்கூடாதென்று சாதாதபர் தடுத்திருக்கிறார்.

அந்தமனிதர்கள் யாரென்றால்:—கண்ணோவுக்காரர், தலையிலாவது காதிலாவது, சிரங்குள்ளவர்கள், காக்காவலியுள்ளவர்கள், தலையில்ரணங்கண்டு மூக்குவழியாய் சிலைத்தண்ணி ஒழுகிக்கொண்டிருக்கும்பேர்கள், க்ஷயரோகிகள், குஷ்டரோகிகள், அம்மை, வயிறுகடுப்பு, வாந்திபேதி அல்லது இதர தொத்துவியாதிகளுள்ளபேர்கள்.

III. ஹிந்துக்களுடைய முக்கியகிரந்தமாகிய ஸ்ரீமத் ராமாயணத்தின் இரண்டாவது காண்டத்தில், பரதர் தன்பேரில்சொன்ன குற்றம் நிஜமாயிருந்தால் தனக்கு மகாகேடு சம்பவிக்கட்டுமென்று சபதம்செய்தார். அதைப்பற்றி யவர் சொன்னதாவது ஓடும்ஜலத்தில் மரணத்தை விளைக்கத்தக்க விஷத்தை யோட்டு அதை எவன்கெடுக்கிறானோ அந்த மகாபாபிசெய்யும் கோரமானபாபம் ஸ்ரீராமனைக்காட்டுக்கு ஓடும்படிக்கு சம்மதித்தவனை அடையட்டுமென்றார்.



இதனால் பானத்துக்குரிய தண்ணீரை கெடுக்கும்பாபம் மிகவும்பெரிதென்றும் அதைச்செய்பவன் நரகத்துக்கே யோக்கியனவனென்றும் பரதருடைய அபிப்பிராயமென்று விளங்குகிறது.

IV. பாகவத்புராணம் அல்லது கிருஷ்ணனுடைய சரித்திரத்தில் பதினோராவது ஸ்கந்தம் உத்தவகீதையில் பக்தரான உத்தவருக்கு ஒரு சுத்தமானவஸ்திரத்தால் வடிக்கட்டிய ஜலந்தவிர, வேறேஎந்தஜலத்தையும் பானம்செய்யவேண்டாமென்று கிருஷ்ணன் உபதேசித்திருக்கிறார். (இதனால் இக்காலத்தில் கரியைக்கொண்டு ஜலத்தை வடிக்கட்டுவதற்குண்டாயிருக்கிற யந்திரங்கள் அக்காலத்தில் கிருஷ்ணனுக்குத் தெரியாதென்பது நிதரிசனமாகிறது.)

V. கைகால்களையும், மனிதன் சரீரத்தில் மறைந்தபாகங்களையும்கழுவி மிகுந்தஜலம், ஒருவன் பானம்பண்ணினபிறகு மிகுந்தஜலம், வண்ணான் வஸ்திரங்களை தோய்க்கும் துறைக்கருகாமையிலிருக்கும் ஜலம், சண்டாளர்கள், இறைச்சிக்காரர்கள், சக்கிலிகள், முதலிய ஈனஜாதியார் குளிக்கிறஜலம், அல்லது மாதத்தீட்டுள்ள ஸ்திரீகளும், பிரசவித்தவர்களும், சூதகமாயிருக்கிறவர்களும் குளிக்கிறஜலம் இவைகளை யுபயோகித்துக்கொள்ளக்கூடாதென்று யாக்ஞியவல்கியரிஷி நிஷேதித்திருக்கிறார்.

### "தர்மவிதிகளைப்பற்றியும் நல்லொழுக்கங்களைப் பற்றியும்".

மானவ தர்மசாஸ்திரம் 4-வது அத்தியாயத்தில் பெரிய தர்மசாஸ்திர கர்த்தாவாகிய மனு சொல்லியிருக்கிறதாவது—ஜலத்தில் மூத்திரத்தையாவது, மலத்தையாவது, எச்சிலையாவது, துணியையாவது, அழுக்குகூடிய மற்ற எதையாவது அல்லது இரத்தத்தையாவது, வேறே எவ்விதமான விஷத்தையாவது ஒருவரும்எறியக்கூடாது.

இந்த வுதாகரணங்களெல்லாம் இந்நாட்டில் ஹிந்துக்கள் மிக சிறந்ததாக கொண்டாடுகிற வைத்தியநாத தீக்ஷிதர்செய்த தர்மசாஸ்திரத்தில் ஆசார காண்டத்திலிருந்து கண்டெடுத்தது. இவ்விஷயங்களை எனக்கு நேசரான வ-கிருஷ்ணமாசாரியர் சகாயத்தால் தெரிந்துகொண்டேன்.

### "இவ்விதிகளின் அனுஷ்டானத்தைப்பற்றி."

வழக்கப்படியே சாஸ்திரத்தை ஒப்புக்கொண்டாலும் அதின் கருத்துபடிக்கு நடவடிக்கை யில்லை. இவ்விதிகளின் முக்கியமான கருத்து என்னவெனில் அவரவர்கள்வீட்டுக்கு உபயோகித்துக்கொள்ளும் ஜலம்சிறிதும் அழுக்கில்லாமல் மிகப்பரிசுத்தமாக இருக்கவேண்டுமென்பதேயாம். உயர்ந்தஜாதியாருடைய ஜலத்தை தாழ்ந்தஜாதியார் உபயோகப்படுத்திக் கொள்ளக்கூடாதென்று நிஷேதித்திருப்பது ஏனென்றால் தாழ்ந்த ஜாதியார்களு

டைய நடத்தைகளும் வழக்கங்களும், அவ்வளவு பரிசுத்தத்தை அநுசரித்திருக்கமாட்டாதாகையால் அவர்கள் தொடுகிற ஜலத்தை, அவர்கள் கெடுத்துப்போடுவார்களென்று நினைக்கப்பட்டிருந்தது இப்படியிருந்தபோதிலும் நான் உங்களை நியாயமாய்ச் சொல்லும்படி ஒன்றுகேட்கிறேன். அதுயாதெனில் தென் இந்தியாவில் அனேகவிடங்களிலும், அதன்றியில் இந்தியாமுழுதிலுமே உங்கள்தேசத்தார்களில் உயர்ந்தஜாதியார் குளங்களிலும், கிணறுகளிலும் நடத்தும்நடவடிக்கை பரிசுத்தத்துக்கும் விவேகத்துக்கும் எவ்வளவு விரோதமாயிருக்கிறதோ அதைக்காட்டிலும் விரோதமான வழக்கங்களுமுண்டோ? நான் இந்நாட்டில் சஞ்சாரம்செய்யும் சமயங்களில்கண்ட சிலசங்கதிகளைச் சொல்லுகிறேன். நான்போகும்போதும் வரும்போதும் அனேக குளக்கரைகளில், நின்று பார்த்திருக்கிறேன். அப்பொழுது நான் கண்ட சிலவிஷயங்களை இதன்கீழ் விவரிக்கிறேன்.

சேலம் ஜில்லாவிலுள்ள உசூரில் ஒரு குன்றின்மேல் கோவிலும் அதினடியில் நன்றாய்கட்டப்பட்ட ஒரு சிறுகுளமும் இருக்கக்கண்டேன்.

அதில் ஸ்திரீகளும் புருஷர்களும் குளித்துக்கொண்டும், தங்களுடையவஸ்திரங்களை துவைத்துக்கொண்டுமிருந்தார்கள் - ஒரு தடவை நான் எண்ணிப்பார்த்தபோது பன்னிரண்டுபேர் அவ்வாறுசெய்துகொண்டிருந்தார்கள். அப்பொழுது ஒரு பெண்பிள்ளை ஒருமூட்டைதுணியை கொண்டுவந்து, அதில் சாவகாசமாய் துவைத்தபிறகு தானந்தஜலத்திலேயேகுளித்து தன்கையிற்கொண்டுவந்திருந்த ஒரு பித்தளைப்பாத்திரத்தில் நிறையஜலம்மொண்டுகொண்டு வீட்டுக்குப்போனதையும் பார்த்திருந்தேன். இப்பிரகாரமே அநேகரந்தக்குளத்தில் குளித்துக்கொண்டும் எச்சிலை ஜலத்தில் உமிழ்ந்துகொண்டும் நாலுவிதமாயிருந்ததைப்பார்த்ததுமன்றி அந்தஜலத்தை பெண்பிள்ளைகள் சட்டிகளில் நிரப்பிக்கொண்டு வீட்டுக்குப்போனதையும் கண்டேன். இதேஜலத்தை இரண்டுசீசாக்களில்நிறைய் நான்கொண்டுபோய் பரிசோதித்துப்பார்த்தேன். அது ஒருவிதமான வெண்மைகலந்த பச்சைவர்ணமாயும் நோயுண்டாக்கத்தக்க சகிக்கக்கூடாத நாற்றமுள்ளதாயு மிருந்ததுமன்றி கண்ணுக்கு நன்றாய்தெரியும்படி புழுக்களும் அதில் நிறைந்திருந்தன. அந்த கிருமிகளைப்பார்க்க பூதக்கண்ணாடிகூட தேவையில்லை. நானிருந்த பங்களாவில் இந்த ஜலத்தை பரிசோதித்துக்கொண்டேயிருக்கையில், சுதேச உத்தியோகஸ்தர் ஒருவர் நல்ல மதிக்கத்தக்கவர் என்னைக் காணவந்தார். அவர் பல விஷயங்களைப்பற்றியனேக சங்கதிகள் எனக்குத் தெரிவித்ததாக ஞாபகமிருக்கிறது. பிறகு இந்த ஜலத்தைப்பற்றி நானவருடன் பிரஸ்தாபித்து யிந்த ஜலத்தை, பிரஜைகள் பானத்திற்குபயோகப்படுத்துகிறார்களாவென்று கேட்டேன். "ஆம், ஆம், இந்த ஜலமெல்லோர்க்கும் இஷ்டமானது, அது மிகவும் சுகமானது" என்று சொன்னார். நானிந்த ஸானிடெரி கம்மிஷனர் உத்தியோகத்துக்கு வந்தவுடனே இது நடந்தது. அதுமுதல் பல குளங்களருகாமையிலும் நான் நின்று கவனித்துப் பார்த்திருக்கிறேன்.



எல்லாவிடங்களிலும் மேலே விவரித்திருக்கிற பிரகாரமேநடந்துவருகிறது. அதைப்பற்றிக் கேட்டால் மேற்கண்டமாதிரியான விடைகளே கிடைக்கின்றன. சில இடங்களில்மாத்திரம் குளிப்பதற்குபயோகப்படுத்துகிற ஜலத்தை குடிக்கிறதில்லையென்றும் குளிப்பதற்கு வேறேயும் குடிப்பதற்கு வேறுமாய் குளங்கள் தனித்தனியாய் வைக்கப்பட்டிருக்கின்றனவென்றும் கேள்விப்படுகிறேன். சிதம்பரத்திலிப்படிதான். இவ்வாறுசெய்வது மேற்கே ஐரோப்பாதேசங்களின் சாஸ்திரப்படிக்கி சரீர சௌக்கியத்துக்கு ஆவசியமாகவிருப்பதன்றி உங்களுடைய முன்னோர்கள் பண்டு மகா விவேகத்தோடு ஏற்படுத்தியிருக்கும் கோட்பாடுகளுக்கும், விதிகளுக்கும் ஒத்திருக்கிறதென்று நான் சொல்வேன். சென்ற வருஷத்து கடைசியிலும் இவ்வருஷாரம்பத்திலும் வடமேற்கு திசையிலிருந்து நம்முடைய இராஜதானியில் சேர்ந்த ஜில்லாக்களில் வாந்திபேதி பிரவேசித்து பரவிக்கொண்டிருக்கும்போது சுறுசுறுப்புள்ள கலெக்டர் ஒருவர் தன்னுடைய ஜில்லா கெஜட்டில் பிரசுரஞ்செய்யவேண்டியதற்காக கிராமாந்திரங்களில் ஜனசௌக்கியத்தை விருத்திசெய்யும்பொருட்டு சில முக்கியமான விதிகளை தெளிவாயெழுதி யனுப்பும்படி என்னைக் கேட்டுக்கொண்டார். பின்பு நான் எழுதிய விதிகள் அவர் கருத்துக் கிசைந்திருந்தனவென்றும் அவை தெளிவாயும் ஜனங்களெளிதில் தெரிந்துகொள்ளத்தக்கனவாயுமிருந்தனவென்று அவர் தெரிவித்ததின்பேரில் அவ்விதிகளுக்கு ஒரு பிரதி யெல்லா முன்சிபாலிடிகள் லோகல்பண்டு போர்ட்டுகள் இவற்றின் பிரஸிடெண்டுகள் அல்லது சபைத் தலைவர்களுக்கு அனுப்ப மேற்போட்டுக்கொண்டேன். கொஞ்சகாலத்திற்குமுன் சென்னபட்டணத்திலிருந்து வெகுதூரம் வடக்கிலிருக்கிற ஒரு முன்சிபாலிடியை நான் பார்வையிட்டுக்கொண்டிருக்கும்பொழுது அவ்விடத்திய மானேஜர் அந்த கம்மிஷனர்களுடைய தீர்மானங்களிலொன்றை எனக்குக் காண்பித்தார். அதில் என்னுடைய விதிகளை யாவரும் கவனிக்கவேண்டுமென்றும் அங்கிருந்த முக்கியமான இரண்டு குளங்களை பானத்துக்காகமாத்திரம் வைத்து வைக்கவேணுமென்றும் அவைகளில் ஜனங்கள் குளிக்காமலும் துணிகளைத் தோய்க்காமலும் தடுக்க ஒரு போலீசு சேவகனை ஒவ்வொன்றுக்கும் வைக்கும்படியாயும் நிச்சியத்ததாக கண்டிருந்தது. அந்தக் குளங்களுக்கு ஏ - என்றும் பி - என்றும் பெயரிட்டு அவைகளைப்பற்றி சில சங்கதிகள் சொல்லப்போகிறேன். நானந்த தீர்மானத்தைப் படித்தபொழுது மிகவும் ஸந்தோஷப்பட்டு பெருமை யடைந்தேன். நம்முடைய பிரயத்தினம் ஈடேறிக்கொண்டுவருகிறதென்று முணர்ந்தேன். மறுநாள் காலையில் அப்பட்டணத்தைச்சுற்றி நான் வரும்பொழுது மேற்சொல்லிய மானேஜர் சில தூரத்திலிருந்து வொருகரையை எனக்குக்காண்பித்து அது தான் ஏ - குளத்தின்கரை அதில் துணியை தோய்க்கவொட்டாமலும் ஸ்நாநஞ்செய்யவொட்டாமலும் நல்ல நிஷ்கரிஷை செய்யப்பட்டிருக்கிறதென்றார். நல்லது அதை நாம் போய்ப் பார்ப்போமென்று சொன்னேன், எல்லோரும் போனோம், அந்த ஊர் டாக்டரும் மேற்படி மானேஜருமென்னுடன்கூடவிருந்தார்கள். நாங்கள் சீக்கிரமவ்விடம்போய் சேர்ந்

தோம் அது நிச்சயமாகவே இவ்விடத்திலிருக்கிற நம்முடைய மைலாப்பூர் குளத்திற்கு இரண்டுபங்கு பெரிதானதாயும் பார்க்க வெகுநன்றாயுமிருந்தது அந்தக் குளத்தைச்சுற்றி நான்[illegible]திலும் ஜனங்கள் நிறைந்திருந்தார்கள், வெகுவாய் அ[illegible]லோரும் அதிக அவசரமாய் வஸ்திரங்களைத் துவைத்துக்கொண்டும் அப்படி துவைக்காதபேர்கள் உடம்பைக் கழுவி குளித்துக்கொண்டுமிருந்தார்கள். இவைகளையெல்லா மென் சிநேகிதர் மானேஜர் பார்த்து (பரிஹாஸத்துக்கு ஆளானோமேயென்று) வெட்கமடைந்தாரென்பதை நான் அவர் முகக்குறியினாலறிந்தேன். நாங்களிருந்தவிடத்துக்கு நேராய் ஒரு கிழவன் அழுக்கு வஸ்திரமொன்றை துவைத்து பிறகு ஸ்நானஞ்செய்து பலவிசை வாயில் ஜலமிட்டு கொப்பளித்துவிட்டுப்போனான். அதற்கு ஒரு க்ஷணநேரத்துக்குள்ளே யொரு பெண்பிள்ளை யங்குவந்து அந்த கிழவன் ஒரு நிமிஷத்திற்குமுன எங்கே நின்றுகொண்டு மேற்சொல்லியபடி செய்தானோ அதேயிடத்தில் இவளும் நின்று, சமையல்செய்வதற்கும் குடிப்பதற்கும் பளபளப்புள்ள இரண்டு பித்தளை பாத்திரங்களில் அதேஜலத்தை மொண்டுகொண்டு போனாள். இதனாலந்தக்கிழவன் துணியழுக்கு கொஞ்சமும் அவன் துப்பின எச்சிலில் கொஞ்சமும் குடிப்பதற்கும் சமைப்பதற்கு மவள் வீட்டிற்குக் கொண்டுபோனாளென்பதில் சந்தேகமில்லை. இது எவ்வளவு அருவருப்பானசெய்கையாயிருக்கிறது. இவ்வாறு எங்களுடைய கண்ணெதிரில் நாங்கள் கண்ட மகா வெறுக்கத்தக்க நடவடிக்கைகள் இக்குளத்தைச் சுற்றிலு மாத்திரமல்ல. மற்ற இந்த மகா விஸ்தாரமாகிய செழித்த இந்தியாதேசத்தில் எங்கேபார்த்தாலும் காணுகிற எண்ணிறந்த குளங்களைச் சுற்றிலும் இம்மாதிரியாகவே எப்பொழுதும் நடந்துவருகிறது. இப்படியிருக்கிறபடியால் அம்மை, வாந்திபேதி, ஜுரம், முதலிய பெருந்தொத்துநோய்கள் ஜனக்கூட்டத்தில் உண்டாய்விட்டால் அவை அதிசீக்கிரத்தில் பரவுவது ஆச்சரியமோ! ஆயினு மிவைகளை தடுப்பது வெகு எளிது.

இப்படிப்பட்டவிஷயங்களில் எவ்விதமான கட்டளைக்கும் இந்தியாதேசத்து ஜனங்கள் உட்படுகிறவர்களாயிருக்கிறார்கள். மேலே நானெடுத்துச்சொல்லிய முனிசிபாலிடியாருடைய நல்ல தீர்மானப்படிக்காவது அதிலுஞ் சிறந்த உங்களுடைய பூர்வ தர்மசாஸ்திரிகள் ஏற்படுத்திய விதிகளின்படியாவது நடந்துவந்தால் இவ்வித அருவருப்புள்ள வெறுக்கத்தக்க நடவடிக்கைகளை சுலபமாய் நீக்கக்கூடும். பரிசுத்தமான ஜலத்தை யுபயோகிக்கவேணுமென்பது பிரபலமான தொத்துவியாதிகளை விலக்குவதற்காகவேயல்ல. ஒருவன் துணியை தோய்த்தும் குளித்தும் அசுத்தப்படுத்திய ஜலத்தை யற்றொருவன் குடிப்பது மிகவும் அருவருப்பானதென்று எல்லோருஞ் சம்மதிக்கத்தக்கது தானே. அது நல்லொழுக்கத்திற்கு மிகவும் விரோதமாயிருப்பதன்றி உங்களுடைய தர்மசாஸ்திரிகளும் மகரிஷிகளும் செய்த கட்டளைக்கு நேர்விரோதமாயிருக்கிறதல்லவா. இதுவுமன்றியில் மேற்சொல்லிய விதிகளை எழுத்துமூலமாய் எழுதி வைத்தால்மட்டும் போதாதென்பதை நாம் ஞாபகத்தில் வை



க்கவேண்டும். அவ்விதிகளின்படி நிறைவேறி வருகிறதாவென்று ஒருவன் பார்த்துவரவேண்டும். இல்லாவிட்டால் நம்முடைய சொல்லில் நம்பிக்கையில்லாத வொருவன் குடிக்குந் தண்ணீரில் துணிதோய்க்கக்கூடாதென்றும் குளிக்கக்கூடாதென்றும் ஜனங்களை தடுத்தும் இன்னம் ஏன் வியாதிகளுண்டாகின்றனவென்று கேட்பான். இதற்கு திருஷ்டாந்தமாய் ஏ-குளமிருக்கிற ஊராரும் அப்படி கேட்கலாம் ஆனால் அவ்விடத்தில் உத்திரவுபடிக்கு ஜனங்கள் நடந்தார்களா நீங்களே சொல்லுங்கள். மேற்கண்ட விதிகளின்படி நடத்தும்பக்ஷத்தில் வியாதிகள் அடங்கிப்போகிறது என்பதை இப்போது தெரியப்படுத்துகிறேன்.

### “வாந்திபேதி முதலான வியாதிகள் ஜலத்தினால் பரவுகின்றனவென்பதைப்பற்றி.”

வாந்திபேதி முதலிய பெரிய தொத்து வியாதிகள் ஜலத்தினால் பரவுகின்றனவென்று நான் சொல்வதற்கு அத்தாக்ஷி யென்னவென்று நீங்களென்னை கேட்கலாம். இவ்விஷயத்தைக் குறித்து பேசும்போது முதலில் நான் உங்களுக்குத் தெரியப்படுத்துவது என்னவென்றால் வாந்திபேதி உண்டாவதற்காவது பரவுகிறதற்காவது காரணம் ஜலமொன்றே என்பது என்கொள்கை அல்ல. அது எவ்விதமாயுண்டாகிறதோ அதைப்பற்றி எனக்கு சில அபிப்பிராயங்களுண்டு. ஆனாலவைகளை வெளிப்படுத்த சமயம் இதல்ல. காற்று ஆடை உண்ணும் பதார்த்தங்கள் ஜலம் அதல்லாதே இதர பானத்துக்கு உபயோகமானவைகள் இவையெல்லாம் வாந்திபேதியைப் பரவச்செய்யலாமென்றும் பரவச்செய்கின்றனவென்றும் நம்புகிறேன். ஆனால் இந்தியாதேசத்தில் முக்கியமாய் வாந்திபேதி பரவுவதற்கு ஜலமே வெகுவாய் முதற்காரணமென்பது எனது கொள்கை. இந்த தேசத்தில் ஜலத்தை யுபயோகிக்கிற விதம் மற்றெங்குமில்லாத நடவடிக்கையை அனுசரித்திருக்கிறபடியால் அதினாலேயே ஜனச்சேதத்தை விசேஷமாக உண்டாக்கும் மகா கொடிய தொத்துவியாதியாகிய வாந்திபேதி அடிக்கடி காணுகிறது. இதற்கு திருஷ்டாந்தங்கள் அல்லது திருஷ்டாந்தங்களாக எனக்குத் தோற்றுமவைகள் வெகுவாயிருக்கிறபடியால் அவைகளில் இன்னதையெடுத்துச் சொல்லலாமென்று கண்டறிய பிரயாசமாயிருக்கிறது.

வாந்திபேதிக்கும் ஜலத்திற்கும் இருக்கிற ஸம்பந்தத்தை முதவில் எடுத்துக்காட்டியவர்களுள் ஒருவர் லண்டன் நகரவாசியாகிய டாக்டர் ஸ்நோ என்பவர் - இவ்விஷயமாக அடிக்கடி பிரஸ்தாபத்துக்கு வருகிற “பிராட் ஸ்டிரீட்டு கேஸ்” அல்லது பெரிய வீதியில் நடந்த சங்கதியானது அவர் கண்டுபிடித்தது. 1854வருஷத்தில் நல்ல சௌக்கியமானதாயும் பணக்காரர்களிருக்குமிடமாயுமிருந்த ஓரிடத்தில் வாந்திபேதிகண்டு ஜனங்கள் மிகவும் வருந்திகொண்டிருந்தனர். இதற்குக் காரணமறியும் பொருட்டு அங்குள்ள சகலவிஷயங்களும் சூக்ஷமமாய் பரிசோ

திக்கப்பட்டன. அப்பொழுது வாந்திபேதி கண்டிருந்த ஒரு குழந்தை பிராட்டு ஸ்டிரீட்டு அல்லது பெரிய தெருவில் 40-வது நெம்பர் வீட்டில் இறந்ததென்றும் அதனுடைய மல மூத்திரங்கள் எல்லா ஜனங்களு முபயோகிக்கும் நல்ல தண்ணீர் கிணற்றுக்கு மூன்றடி தூரத்திலேயே ஒரு மலக்குழியில் போடப்பட்டிருந்தனவென்றும் அந்த தண்ணீரை சுற்றுப்பட்டிலிருந்த ஜனங்கள் உபயோகித்துக்கொண்டார்களென்றும் தெரியவந்தது. மேலும் அந்தச் சாக்கடைக்குழியின் கட்டடத்து கற்கள் சுண்ணம்பின்றி தளர்ந்துபோயிருந்தபடியால் அச்சந்துகளாலே குழியிலிருந்த மல மூத்திரங்கள் அந்த நல்ல தண்ணீர் கிணற்றிலிறங்கிக்கொண்டிருந்தனவென்றும் காணப்பட்டது. ஓரோதினத்தில் 140-150 ஜனங்களுக்கு அந்த வியாதியுண்டாயிற்று. இதைப்பற்றி விசாரிக்கையில் அதுமுதலுண்டானபோது சிலதினம்வரைக்கும் வியாதியடைந்த யாவரும் மேற்படி கிணற்றின் ஜலத்தை குடித்தவர்களென்று தெரியவந்தது. அந்த ஜலத்தை யொருவரும் உபயோகிக்கக்கூடாதென்று நிறுத்திவிட்டவுடனே வியாதி மட்டாய்விட்டது. ஆயினும் இத்துடன் சம்பந்தப்பட்ட சங்கதியொன்று மிகவும் விசித்திரமானதாயிருக்கிறது; அதாவது, மேற்படி பெரியதெருவிற்கு அநேக மயில் தூரத்தில் "வெஸ்டு எண்டு ஆம்ஸ்டெட்டு" என்னுமிடத்தில் துபாக்கியில் வெடிமருந்து வைப்பதற்கிருக்கும் சுளைகளைச்செய்பவன் ஒருவனுடைய விதவையாகிய 59 வயதுள்ள ஒரு பெண்பிள்ளை வாந்திபேதி கண்டு மரணமடைந்தாள். இந்த பெண்பிள்ளை முன்னாலே பெரிய தெருவில் வசித்துக்கொண்டிருந்தாள். ஆனால் அவ்விடத்தில் அவள் வெகுமாதங்களிருக்கவில்லை. ஆயினும்—இங்கு சற்று கவனம்வைத்துக் கேளுங்கள்—பிரதிதினமும் பெரிய தெருவிலிருந்து வெஸ்டெண்டு தெருவுக்கு ஒரு வண்டி போய்க்கொண்டிருந்தது. அதில் அநேக சாமான்களுடன் மேற்படி நல்ல தண்ணீர் கிணற்று ஜலம் ஒரு பெரிய சீசா நிரம்ப கொண்டு போவது வழக்கம். ஏனென்றால் மேற்படி பெண்பிள்ளைக்கு இந்த ஜலந்தானிஷ்டம். அவள் ஆயுசுமுழுமையும் அதையே குடித்துவந்தது தவிர மற்ற எல்லா ஜலத்தையும்விட அதை சிலாக்கியமாக எண்ணியிருந்தாள். அன்று இவளைப் பார்க்க வந்த இவளுடைய மருமகளும் அந்த ஜலத்தைக் குடித்தாள். இஸ்லிங்டென் என்று பெயருடையதாயும் உயரமாயும் சௌக்கியமாயுமிருக்கிற அவளுடைய இருப்பிடத்துக்குத் திரும்பி வந்தவுடனே வாந்திபேதிகண்டு அவளும் இறந்துபோனாள். அச்சமயத்தில் வெஸ்டெண்டிலாவது அதன் அக்கம்பக்கத்திலாவது வாந்திபேதியே கிடையாது.

இவ்விடத்தில் அதோஇருக்குஞ் சுவற்றின்பேரில் ஒரு சித்திரமிருக்கிறதை நீங்கள் பார்க்கிறீர்களல்லவா அது உங்களுக் கெப்படி தோன்றினபோதிலும் எனக்குமாத்திரம் மிகவும் விநோதமான ஒரு செய்தியைச் சொல்லுகிறது. அச்செய்தியைச் சொன்னவர் வைத்தியத்தொழில் செய்பவரல்ல அவர் ஒரு ரோமன் காதலிக் பாதிரியாகையால் அச்செய்தி மேலும் மேலும் விநோதமானதாயிருக்கிறது. ஏனெனில் ஐரோப்பாதேசங்களிற்கூட



ஒருகாலத்தில் இவ்வித பெருந் தொத்துவியாதிகள், மனிதன் செய்யும் பாபத்தைப்பார்த்து கோபங்கொண்ட ஒருதேவதை நேரில் விதிக்குந் தெண்டனைகளென நினைக்கப்பட்டிருந்தனவென்றும் இவ்வியாதிகளுக்குக் காரணம் எதாவது சுற்றுப்பட்டில் புலப்படுகிறதாவென்று தேடிப்பார்த்து அவைகளை கூடியமட்டும் விலக்குவதற்கு மனிதன் தன் புத்தியை செலுத்துவானாயின் அது மிகவும் அகங்காரமான செய்கையென அக்காலத்து மதாசாரியர்கள் நம்பியிருந்தார்களென்றும் இந்த வயதில் எனக்கு ஞாபகமிருக்கிறது. சில காலத்துக்கு முன் இங்கிலாந்து தேசத்தில் வாந்திபேதி மிகவும் மும்மரமாயிருந்தபோது சிலர் கூட்டமாய் கூடி (எனக்கு நினைவாயிருக்கிறபிரகாரம்) அப்பொழுது பிரதான மந்திரியாயிருந்த லார்ட்டு பாமர்ஸ்ட்டன் என்பவரிடம் சென்று இவ்வியாதி தணியும்பொருட்டு தெய்வத்துக்கு வந்தனை வழிப்பாடுசெய்ய ஒருதினம் ஏற்பாடுசெய்யும்படிக்கு கேட்டுக்கொண்டபோது அவர் "கனவான்களே முதலில் நாம் நம்முடைய சாக்கடைகளை சுத்திசெய்து நாம் உபயோகிக்கும் ஜலத்தையும் நன்றாய்ப் பரிசோதித்து பார்ப்போம் அதனால் குணமுண்டாகாமல்போனால் உங்களிஷ்டப்படியே தெய்வத்தைப் பிரார்த்திக்கலாம்" என்று சொன்னதைக்கேட்டு திகைத்துப்போனார்கள். நோய்கள் தெய்வம் சீறுவதினால் உண்டாகிற பெருந்துன்பங்களென இத்தேசத்திலும் பண்டு எங்கிலாந்தில் நடந்ததுபோலவே அநேகர் ஜனங்களுக்கு போதிக்கிறார்களென்பதிற் சந்தேகமில்லை. அது எனக்குந் தெரியும். அந்த தெய்வத்துக்கு பெயருமிட்டிருக்கிறார்கள். தமிழர்கள் மாரியம்மன் அல்லது மாரியாத்தாளென்றும் தெலுங்கர்கள் அம்மவாறு என்றும் சொல்லுகிறார்கள். இவ்விஷயத்தில் என் கொள்கையே சரியானதென்றும் இந்த ஜனங்கள் சொல்வது தப்பென்றும் சொல்லி அவர்களை மனம் நோவச்செய்வதில் எனக்குப் பிரியமில்லை. என் அபிப்பிராயத்தின்பேரிலே எனக்கு அவ்வளவு தூரபிமானமுமில்லை ஆனால் ஒன்றுமட்டும் என் கொள்கையைப் பற்றி உறுதியாய்ச் சொல்லமாட்டுவேன். அதாவது இக்காலத்தில் ஜனசௌக்கியத்துக்குரிய ஏற்பாடுகளைச்செய்யும் தொழிலில் பிரவேசித்திருக்கிற என்னைப்போன்றவர்கள் சொல்வது தப்பாயிருந்தாலும் அதனால் தீங்கொன்றும் விளையமாட்டாது. அழுக்கு ஜலத்தைக் குடிக்காமல் சுத்த ஜலத்தைக் குடிப்பதினால் எப்படிப்பட்டவர்களுக்கும் தீமை நேரிடமாட்டாது. நாமப்படிச்செய்வதினால் எந்த தெய்வத்துக்காவது கோபமுண்டாகுமென்றும் எனக்கு தோற்றவில்லை. அப்படியன்றி எங்களுக்கு எதிர் வாதம்செய்பவர் சொல்வது பிசகானால் ஜனங்கள் தங்களுடைய புத்தியையும் பகுத்தறிவையும் உபயோகித்து இந்த மகா வியாதிகளுண்டாவதற்கு காரணமின்னதென்று கண்டறியவும் அவைகளை கூடுமானவரையில் நிவர்த்திசெய்யவும் முயலக்கூடாதென்று தடுப்பதினால் மேற்கண்ட வியாதிகளாலுண்டாகும் தீங்குகளை அவர் என்றென்றைக்கும் குடிகொண்டிருக்கும்படி செய்கிறார்களல்லவா. இப்பொழுது நாம் இந்த சித்திரத்தை நன்றாய் அறிந்துகொள்வோமாயின் அது மிகவும் விவேகத்தைத் தரத்தக்க விஷயத்தை தெரிவிக்கும். அது

திருநெல்வேலி ஜில்லாவில் வடக்கென்குளமென்கிற கிராமத்தைக் காட்டுகிறது. அந்த கிராமத்தில் 1877ம் ௵ டிசம்பர்மாதத்தில் வாந்திபேதி உண்டாகி அதிக ஜனநஷ்டமுண்டாயிற்று. அது பிராமணர்முதலிய உயர்ந்த ஜாதியாரையே பீடித்துக்கொண்டிருந்ததென்றும் அக்கம்பக்கத்திலிருந்த தாழ்ந்த ஜாதியார் அதினின்றும் தப்பி சௌக்கியமாயிருந்தார்களென்றும் காணப்பட்டது. இச்சமயத்தில் ஒரு கக்ஷிக்காரர் சொல்லியது உயர்ந்த ஜாதியாராகிய பிராமணர்கள்பேரில் தெய்வம் சீறித்தென்றும் இழிய ஜாதிக்காரரான பறயரிடத்தில் தெய்வத்துக்கு கோபமில்லாமலோ அல்லது தயவு உண்டாயோ இருந்தது என்றார்கள்.

இதைக்காட்டிலும் டெல்பெக் என்று பெயருடைய பாதிரி கொண்ட கருத்து அங்கீகரிக்கத்தக்கதென்று எனக்கு தோன்றுகிறது. இவ்விடத்தில் சில கிணறுகளை மேல்ஜாதிக்காரர்களே உபயோகித்துக்கொண்டுவந்தார்களென்றும் மற்ற ஜாதிக்காரர்கள் அவைகளை தொடக்கூடாதென்றும் அவர் அறிந்துகொண்டு இச்சித்திரத்தில் அதை காட்டியிருக்கிறார். மேலும் உயர்ந்த ஜாதிக்காரர்களுடைய கிணறுகள் சீராகக் கட்டப்படவில்லையென்றும் ஸ்நாநம்பண்ணுகிற ஜலமும் துணிதுவைக்கிற ஜலமும் மறுபடியும் கிணற்றிலேயே ஒழுகி விழுந்துபோகிறதையும் அவர் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

இவ்விதமான குற்றங்களை நான் அடிக்கடி என்னுடைய சஞ்சாரங்களில் பார்த்துவருகிறேன். ஆதியில் சீராகக் கட்டப்பட்ட கிணறுகள் காலக்கிரமத்தில் கிலமாய்ப்போய் அசுத்த ஜலம் மறுபடியும் கிணற்றிலிறங்கும்படியாய்விடுகிறது. இம்மாதிரி கிணறு ஒன்று கோயம்புத்தூரிலிருக்கிறது. அனந்தய்யர் கிணறு என்று பிரசித்தமான பெயருள்ளது. அது பெரிதாயும் அழகாயும் பட்டணத்து மத்தியில் ஒரு நல்ல சூத்திரனால் கட்டப்பட்டது. அதை காலையில் பிராமணர்களும் மத்தியானத்திற்கு பிறகு சூத்திரர்களும் உபயோகித்துவருகிறார்கள். அதைக் கட்டுவதற்கு விஸ்தாரமான பணஞ் செலவழிந்திருக்கவேண்டும். அது உண்மையாகவே ஒரு விசித்திரமான கிணறுதான் நல்ல வெய்யிற்காலத்தில்கூட தெளிவாயும் பளபளப்பாயும் குளிர்ச்சியாயும் உள்ள ஜலத்தை அளவின்றிக் கொடுக்கிறது. ஆனாலிப்பொழுது அது பார்ப்பாரின்றி தினந்தோறும் கெட்டுக்கொண்டுவருகிறது. அதைச் சுற்றிலும் பதிக்கப்பட்ட பாவுக்கல்கள் தளர்ந்துபோனபடியால் அதண்டையில் ஜனங்கள் ஸ்நாநம்செய்தாலும் வஸ்திரந் துவைத்தாலும் கீழே விழுகிற ஜலம் அந்த கிணறு கட்டியவன் உத்தேசித்தபடி உடனே தூரத்தில்போய் விழாமல் கிணற்றிலேயே திரும்பவும் கல்லின் சந்தினால் ஒழுகிப்போகிறது. இந்தப்பிரகாரம் அந்த கிணற்றின் ஜலம் அசுத்தப்பட்டிருந்தும் அதைக் குடங்குடமாய் கொண்டுபோய் குடிக்கிறார்கள். இவ்வாறுசெய்வதினால் மகா தொத்துவியாதிகள் சம்பவிக்கின்றனவென்பதை ஆலோசிக்காவிட்டாலும் அன்னியர்கள் தங்கள் துணிகளை துவைத்தோ உடம்



பைக் கழுவியோ அசுத்தப்படுத்திய ஜலத்தை எப்படி ஜனங்கள் குடிக்கிறார்களோ அதை நினைக்கும்மாத்திரத்திலேயே எனக்கு விசேஷமான வெறுப்பும் அருவருப்பும் தோன்றுகிறது.

இப்படியிருக்கிறபடியால் ஓரிடத்திலுள்ள ஜனங்களெல்லாரும் எவ்வளவு எளிதாக விஷமூட்டப்படலாமென்பதை நீங்களே ஆலோசித்துப்பாருங்கள். ஒரு நகரத்திலிருந்து வரும் வழிப்போக்கன் ஒருவனுக்கு முன்னுதாக சாதாரணமாக காணுகிற பேதிகண்டு பின்பு வாந்திபேதி ஆரம்பமானால் அவன் செய்வதை சற்று விசாரிப்போம். மேற்கண்டமாதிரியாயுள்ள குளத்திற்கோ கிணற்றிற்கோ அவன் போகிறான். அவ்விடத்தில் தன் உடம்பைக் கழுவி பேதி சம்பந்தப்பட்ட தன் துணிகளை தோய்த்துக்கொள்ளுகிறான். இப்படி கழுவிப்போன ஜலமெல்லாம் அக்கிணற்றில்தானே ஒழுகிப்போகிறது. அல்லது குளமானால் அது ஜலத்தோடு ஜலமாய் கலந்துபோகிறது. அவன் அவ்விடம்விட்டு போனவுடனே ஏ-யென்னுங்குளத்தில் நான் கண்டபடி ஒரு பெண்பிள்ளை வந்து இவ்விதமாய் கெடுக்கப்பட்ட ஜலத்தை குடத்தில் நிரப்பி தன் குடும்ப உபயோகத்திற்கு கொண்டுபோகிறாள். அந்தக்ஷணத்திற்குமுன் யாவரும் சௌக்கியமாயிருந்த அந்தக்குடும்பத்தில் உடனே வாந்திபேதியுண்டானால் நாமாச்சரியப்படவேண்டுமா? அந்த வழிப்போக்கன் நிஜமாக வேவர்ச்சநாபியையாவது பாஷாணத்தையாவது அந்த ஜலத்தில் கொட்டினால் மேற்படி யழுக்கு ஜலத்தினால் விளையும் கெடுதியை விட அதிக கெடுதியை யுண்டாக்கமாட்டாது. இதுவிஷயத்தில் அந்த மனிதன்பக்ஷமாக சொல்லத்தகுந்தது என்னவென்றால் அவன் தெரியாமற்செய்தானே யல்லது வேணுமென்று ஜனங்களுக்கு தீங்கு உண்டுபண்ணுவதற்காக செய்ததல்லவென்றுமாத்திரமே. ஆனால் இவ்வித சமாதானம் ஒப்புக்கொள்ளத்தக்கதல்ல. நான்செய்யும் காரியம் ஒன்றை நான் குற்றமற்றதாகவே மனப்பூர்த்தியாயெண்ணி செய்தாலும் அதை செய்யும்போது அதினால் நேரிடத்தக்க விஷயங்களை முன்னுதாக ஆலோசிக்காமல் செய்வேனாயின் அதினால் மற்றொருவன் சாகவோ அல்லது காயப்படவோ நேரிடும்பக்ஷத்தில் சட்டம் என்னை தண்டனைக்கு உட்படுத்தும். வெளியிலிருக்கும் ஒரு மனிதன் துபாக்கியைச் சுட்டு இந்த அறைக்குள் ஒருவனைக் கொன்றுவிட்டால், என் பிரசங்கத்தைக் கேட்க செத்துப்போனவன் இங்கு வந்திருந்த சங்கதி தனக்கு தெரியாதென்று அவன் சொல்வதினால் சிக்ஷைக்கு தப்பமாட்டானென்பது எனக்கு நிச்சயம். ஆராவது இந்த அறைக்குள் இருக்கிறார்களாவென்று விசாரிக்கவேண்டிய கடைமை அவனுடையதென்றும் அவன் தகுந்தபடி முன்னெச்சரிக்கையோடு நடக்கவேண்டுமென்றும் சொல்வார்கள். அவன் அப்படி ஆலோசனையில்லாத காரியம் செய்வதினால் ஒருவனை காயப்படுத்தலாம் அல்லது கொல்லவுங் கொல்லலாம். அப்படிப்பட்டவன் அவன்செய்தகுற்றத்துக்கு தக்கபடி சிக்ஷையும் அடைவான். மேற்கண்ட வழிப்போக்கனோ நேராக அநேக நூறு ஆள்களையும் இவர்கள்மூலமாய் எத்தனையோ ஆயிரம் ஜனங்களையும் கொல்லுகிறான். ஆயினும் அவனை யாரும் கேட்பா

ரில்லை. அவன் யாதொரு தண்டனையுமின்றியிருக்கிறான். சட்டப்படிமாத்திரம் அவன் தண்டிக்கத்தக்கவனே. பீனல்கோட்டில் அவனுக்கு தெண்டனை விதித்திருக்கிறது. ஆனால் அதை பிரஜைகள் கூடி நிறைவேற்றவேண்டும். மேற்படி கோடின் 14-வது அத்தியாயம் 277-வது பிரிவில் சொல்லியிருப்பதாவது "எவனாவது ஜனங்களுக்கு உபயோகமான யாதொரு ஊற்று அல்லது தடாகத்தின் ஜலத்தை வேணுமென்று கெடுத்தாலும் சரி அல்லது அழுக்குகள் அதில் சேரும்படிசெய்தாலும் சரி, அப்படிசெய்வதினால் அந்த ஜலத்தை சாதாரணமாய் உபயோகித்துக்கொண்டுவருவதற்கு முன்னைக்காட்டிலும் சற்று யோக்கியதைக்குறைவு உண்டானால் அவனுக்கு மூன்றுமாசத்துக்கு மேற்படாமல் காவல் அல்லது அன்னூரு ரூபாய்வரையில் அபராதம் அல்லது இவ்விரண்டு தெண்டனைகளும் சேர்த்து விதிக்கப்படும்." மேலே ஏ-யென்னும் குளத்தில் ஒரு கிழவன் தன் உடம்பைக் கழுவினானென்றும் துணிகளை துவைத்துக்கொண்டானென்றும் சொன்னேனே. அக்கிழவன் துவைத்த துணி வாந்திபேதியால் சற்றுநேரத்துக்குமுன் இறந்த ஒரு மனிதன் தரித்திருந்ததாயுமிருக்கலாமல்லவா. அப்படியிருப்பதற்கு தடை என்னவிருக்கிறது. குடிப்பதற்குமாத்திரமே சில குளங்களைக் கண்டிதமாய் ஏற்படுத்திவைக்கும்பக்ஷத்தில் அவைகளை ஜனங்கள் குடிப்பதற்கே உபயோகிக்கவேணுமென்று அறிந்து அப்படியே வழக்கத்திலும் வந்துவிடும் இம்மாதிரி வழக்கமுண்டானால் மேற்கண்ட அபாயம் நேரிடுவது மிகவும் அரிதாய்விடும்.

அதிசீக்கிரத்தில் மரணத்தை யுண்டுபண்ணுவதினாலும் மகா கோரமான வருத்தத்தை விளைவிக்கிறபடியாலும் வாந்திபேதி மிக பயங்கரமான வியாதியேயானாலும் ஜனச்சேதம் அதிகமாயும் அடிக்கடியும் உண்டாவது அதினாலல்ல. ஜ்வரமே நமக்கு எல்லா வியாதிகளைக்காட்டிலும் முக்கியமான விரோதி. அது அசுத்தமான ஜலத்தை உபயோகப்படுத்துவதினால் மிகவும் அதிகமாய் உண்டாகிறதென்று நான் உறுதியாய் நம்புகிறேன். ஆனால் இவ்விஷயத்தை நிதர்சனப்படுத்திக் காட்டுவது பிரயாசம். சிலவிடங்களில் ஜலத்தினுடைய தோஷத்தால் ஜ்வரம் உண்டாகிறது என்பதை இத்தேசத்தாரே நன்றாய் நம்புகிறார்களல்லவா. உயிர்ச்சேதத்தை அதிகமாய் விளைவிப்பது ஜ்வரம்மாத்திரமேயல்ல இன்னம் இதர நோய்களுமிருக்கின்றன. சென்ற 1879௵த்தில் பேதியினால் 2,50,000 பேர்கள் மடிந்துபோனார்கள் அவ்வருஷத்தில் நோய்கள் விசேஷமாயிராமல் ஜனங்களுடைய சௌக்கியம் சராசரிக்கு குறையாமலிருந்தபடியால் திருஷ்டாந்தத்திற்கு அதை எடுத்துக்கொண்டேன். இத்தேசத்து ஜனங்களுக்குக் குடலைப்பற்றிய வியாதிகளினால் மிக பலக்குறைவும் வேதனையும் உண்டாகின்றன. இந்த வியாதிகளால் எவ்வளவு ஜனங்கள் உபத்திரவப்படுகிறார்களோ அதை என்னைப்போல் அனேகவருஷகாலம் பெரிய ஆசுபத்திரிகளிலிருந்து அனுபோகப்பட்டவன் தான் அறியக்கூடும். குடலுக்குள் கிரிமிகளிருப்பதினாலித்தேசத்தில் அநேக ஏழை ஜனங்கள் மிகவும் வருத்தப்படுவதைப் பார்க்க பயங்கரமாயிருக்கிறது.



மேலும் ஏழை குடும்பங்களிலாவது பணக்காரர் வீடுகளிலாவது பெண்பிள்ளை ஒருத்தி வயிற்றுநோவால் வெகுகாலம் பொறுக்கக்கூடாத நோவை அனுபவித்து பின்பு தனக்கு சகிக்கக்கூடவில்லையென்றும் தன் வயிற்றில் ஏதோ சில பேய்கள் பூந்துகொண்டு கடினமான நோவை யுண்டாக்கின்றனவென்றும் தனது சிநேகிதர்களோடு சொல்லி ஒரு கிணற்றில் விழுந்து பிராணனைவிட்டாளென்று பலதரமும் நீங்கள் கேள்விப்படுகிறீர்களல்லவா. இவ்விதமா யிறந்துபோகிற பேதை பெண்பிள்ளைகளுக்கு வயிற்றில் சில கிரிமிகளுண்டு அவைகளுக்கு வயித்திய சாஸ்திரிகள் "லம்பிரிசி" என்று பெயரிட்டிருக்கிறார்கள் அவை குளங்களிலுள்ள அசுத்தமான ஜலத்தைக்கொண்டு சோறு சமைத்துண்ணுவதினாலும் அந்த ஜலத்தை குடிப்பதினாலும் உண்டாகின்றன.

தேகசௌக்கியத்தைக் காப்பாற்றுவதைப்பற்றிய ஹைஜியன் என்னும் சாஸ்திரத்தில் சிறந்த வித்துவானென்று, வயித்திய சாஸ்திரத்தில் பயிற்சியுள்ள நாங்கள் ஒப்புக்கொள்ளும் டாக்டர் பார்கஸ் என்பவர் எழுதிய புஸ்தகத்தில் ஜலத்தைப்பற்றியுள்ள பாகத்தை முடிக்கும்போது அடியிற் கண்டிருக்கும் அனுபவத்திற் கிசைந்த அபிப்பிராயங்களைச் சுருக்கி சொல்லியிருக்கிறார்.

I. ஒரு ஜனக்கூட்டத்தில் தொத்துவியாதியாக உண்டாகிற பேதிக்கு காரணம், சற்றேறக்குறைய எல்லா சமயங்களிலும் அசுத்தமான காற்று, அல்லது அசுத்த ஜலம், அல்லது கெட்ட உணவு. பல மனிதர்களை திடீரென்று ஏககாலத்தில் அது பாதித்தால் பின்குறித்த இரண்டிலொரு காரணத்தால் உண்டாயிருக்கவேண்டுமென்று ஊகிக்கலாம். அது பல குடும்பங்களுக்குப் பரவுமாயின் ஜலக்கெடுதியினாலுண்டாயிற்றென்றே நிச்சயிக்கலாம். ஆனால் அவ்வசுத்தத்துக்கு காரணம் அற்பகாலத்தில் மறைந்துபோகலாமாகையால் அதை திருஷ்டாந்தமாய்க் கண்டறிய எப்பொழுதும் சுலபமாயிருக்கமாட்டாது.

II. பேதியாவது சீதபேதியாவது அடிக்கடி ஓரிடத்திலுள்ள ஜனங்களுக்கு உண்டாய்க்கொண்டிருந்தாலும் சரி, பிரதி வருஷமும் சில காலங்களில் நிஷ்கரிஷையாய் உண்டாய்க்கொண்டுவந்தாலும் சரி அதற்கு காரணம் அநேகமாய் கெட்ட ஜலமேயன்றி வேறொன்று மல்லவென்று எண்ணவேண்டும்.

III. ஹஸ்தி சுரமாவது வாந்திபேதியாவது திடீரென்று உண்டாய் ஓரேயிடத்தில் சுற்றிக்கொண்டிருந்தால் அதற்கு வேர் கெட்ட ஜலமென்றே நிச்சயிக்கலாம்.

IV. விஷக்காற்றினாலுண்டாகிற சுரங்கள்விஷயத்திலும் மேற்கண்ட விவரங்களொத்திருக்கும். முக்கியமாய் அந்த சுரம் மிகவும் அபாயத்தை உண்டுபண்ணுவதாயிருந்தால் ஒருவேளை கெட்ட ஜலத்தினாலுண்டாயிருக்கக்கூடுமோவென்பதை நுட்பமாய் விசாரிக்கவேண்டும்.

**V.** ஜலத்தினுல் சில சிறிய கிரிமிகளின் முட்டைகள் சரீரத்
தில் சேர்க்கப்பட்டிருக்கின்றனவென்று சில வியாதிகளால் திரு
ஷ்டாந்தமாய் தெரியவந்திருக்கிறது. பின்னும் சில வியாதிக
ளால் அப்படியிருக்கலாமென்று ஊகிக்கக்கூடியதாயிருக்கிறது.

**VI.** ஜலத்திலுள்ள ஒவ்வொரு கெடுதலினுலும் உண்டாகத்
தக்க வியாதியின் பரிமாண மிவ்வளவென்று சொல்லவாவது,
மிகவும் கெட்டதல்லாத ஜலத்தினுல் ஜன சௌக்கியத்துக்கு
நேரிடும் குணத்தை யளவிடவாவது இப்பொழுது கூடாமையா
யிருந்தாலும் சுத்தமான ஜலம் விசேஷமாய் கிடைக்கும்பக்ஷ
த்தில் ஜனங்களுடைய சௌக்கியம் விருத்தியாகிறதென்பது
மாத்திரம் நிச்சயம்தான். இதுவேயல்ல வேறே சில முகாந்
திரங்களாலும் நல்ல ஜலம் குறைவின்றி விசேஷமாயிருப்பது
சரீர ஆரோக்கியத்துக்கு முக்கிய காரணமென்று நாம் அறியக்
கூடியதாயிருக்கிறது. வாந்திபேதியைப்பற்றி டாக்டர் மாக்ன
மாரா என்பவர் எல்லோரும் புகழும்படி இயற்றியிருக்கிற கிரந்
தத்தில் இந்த சங்கதியைக்குறித்து மேற்சொல்லியதைப்பார்க்கி
லும் விசேஷமாக எழுதியிருக்கிருர். அதென்னவென்ருல் "ஒரு
விசை வாந்திபேதி நமக்குள் வந்தால் நம்மை நாமே காப்பாற்
றிக்கொள்வதற்கு முக்கியமான வழி ஒன்றிருக்கிறதென்பது
என் கொள்கை. ஒரு பட்டணம் அல்லது பட்டாளங்களிருக்கு
மிடம் அல்லது வீடு இவைகளில் வசிக்கும் ஜனங்கள் குடியி
ருக்குமிடத்தில்மட்டுமல்ல, வேலைக்குப்போகிற விடத்திலும்,
வாந்திபேதி சஞ்சாரம்செய்யத்தொடங்கியபிறகு எல்லாகாலங்க
ளிலும், நன்ருக வடிக்கட்டிய புதிய ஜலத்தைத்தவிர வேறொரு
ஜலத்தையும் உட்கொள்ளக்கூடாதென்று ஓரே ஏற்பாடுசெய்து
நடத்திவந்தால் அது ஒன்றேபோதும் மற்ற தேக சம்ரக்ஷணை
க்கு வேண்டிய எல்லா சாதனங்களையும் விட்டுவிடலாமென்று
நான் நம்புகிறேன்."

கனவான்களே, இதுவரையில் நான் சொல்லியது இந்தவிஷய
த்தில் உங்களுக்கு சிரத்தையை உண்டாக்கப் போதுமானதெ
ன்று நினைக்கிறேன். மேலே விவரித்த தீங்குகளை விலக்குவத
ற்குள்ள உபாயம் மிகவும் சுலபமானது. உங்கள் கைக்குட்பட்
டதாயுமிருக்கிறது. துரைத்தனத்தார் ஜன சௌக்கியத்துக்காக
பல ஏற்பாடுகளைச்செய்து, தகுந்த வுபதேசங்களைக்கொடுத்து
முனிசிபல் சபைகளையும் ஜன சௌக்கிய விசாரணைக்கு உத்தி
யோகஸ்தர்களையும் வயித்தியம்செய்ய டாக்டர்களையும் நியமி
க்கலாம். இந்த டாக்டர்கள் இனி தத்தம் இலாகாவில் ஜன
சௌக்கிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டிய உத்தியோகஸ்தர்க
ளாயும் இருப்பார்களென்று நம்புகிறேன். துரைத்தனத்தார்
இவ்வளவுசெய்தபோதிலும் அவர்கள் மிகவும் ஆலோசனையோடு
செய்திருக்கும் சட்டதிட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஜனங்க
ளுடைய பூரண சகாயமின்றி ஒன்றும் முடியாது. ஏ - என்
னும் குளத்தைப்பற்றி மேற்சொல்லியபடிகேவலம் கடிதாசியி
லெழுதியனுப்பும் உத்திரவுகள்மாத்திரம் பயன்படமாட்டா.
தேக சௌக்கியத்திற்குரிய கிரமமான ஏற்பாடுகளை பிரஜை



கள் தாங்களே நிறைவேற்றிக்கொள்ளவேண்டும். இந்த தண்
ணீரைப்பற்றிய விஷயம் மிகவும் முக்கியமானதாயிருந்தாலும்
உண்மையில் பிரயாசையானதல்ல. இதற்கு சாஸ்திர விசாரணை
யாவது இரகசியமாகிய மந்திரம்முதலியவாவது வேண்டியதி
ல்லை. இதுவுமன்றி முக்கியமாக அதிக பணச்சிலவும் கிடை
யாது. குலம்பஸ் என்பவர் கோழிமுட்டையை நிற்கவைத்த
தந்திரத்தைப்போல் அது தெரிந்துகொண்டவுடனே வெகு எளி
தாயிருக்கும். இந்த விஷயத்தை அறிந்துகொள்ள விசேஷ
புத்திகூர்மை வேண்டியதில்லை. உங்களுக்கும் வெகுகாலத்து
க்கு முன்னே செம்மையாய்த் தெரிந்திருந்ததுதான். ஆனுல்
அது இப்பொழுது உங்களுடைய துர்பாக்கியத்தால் நிஷ்கார
ணமாய் மறந்து போகப்பட்டிருக்கிறது. எல்லா முனிசிபா
லிடிகளிலும் கிராமங்களிலும் ஜனக்கூட்டமுள்ள விடங்களி
லும் சில குளங்களையும் கிணறுகளையும் குறிப்பாக ஏற்படுத்தி
அவைகளை குடிப்பதற்காகமட்டும் உபயோகித்துக்கெள்ளவேணு
மென்று கண்டிதமாய் விதித்து அவ்விதிப்பிரகாரம் எல்லோ
ரும் நடக்கவேண்டுமென்றும் தீர்மானம்செய்து அதின்படி
நடந்துகொள்வதில் என்ன பிரயாசையிருக்கிறது. அவ்வாறு
ஏற்படுத்தப்பட்ட குளங்களிலும் கிணறுகளிலும் உடம்பையா
வது துணியையாவது கால்நடைகளையாவது கழுவக்கூடாது.
இதற்கு வேறே சிலகுளங்களை .ஏற்படுத்திக்கொள்ளவேண்டும்.
இம்மாதிரியாக ஏற்பாடு செய்வதினுலுண்டாகும் குணங்களை
நம்முடைய சொந்தபட்டணமாகிய சென்னபட்டணத்தில்பா
ருங்கள் - அனேக வருஷங்களுக்குமுன் தென் இந்தியாவில்
வாந்திபேதி கண்டால் சென்னபட்டணம் அதற்குப்பிரியமா
ய்த் தங்குமிடங்களில் ஒன்ருயிருந்தது. அதினுல் அப்போது
ஆயிரம் ஆயிரமாக ஜனங்கள் மடிந்தார்கள். இவ்வருஷத்தி
லே அவ்வுபத்திரவங் கண்ட விடங்களுள் காலக்கிரமத்தில் செ
ன்னபட்டணம் இரண்டாவது இடமாக விருந்தபோதிலும் -
முன் தங்குமிடமாயிருந்த இந்நகரம் அதற்கு இப்போது ஒத்துக்
கொள்ளாமல் இங்கு நிற்காமலே வேறே திக்குகளுக்குப் போய்
விட்டது. சுற்றுப்பட்டிலிருந்து இந்நகரத்துக்கு ஜனங்கள் வரு
த்துபோக்கு அதிகமானபடியால் அவ்வுபாதி திரும்பியும் திரும்
பியும் கண்டுகொண்டிருந்ததுமாத்திரமேயன்றி இவ்விடத்தில்
வேருென்றவில்லை. இதற்குக் காரணம் எனக்குத் தோன்றுவது
யாதெனில் ஜனங்களெல்லோரும் அல்லது ஜனங்கள் பெரும்
பான்மையும் சாதாரண குளத்து ஜலத்தை யிப்பொழுது குடி
க்காமல் குழாய்வழியாய் வரும் புழல் ஏரி ஜலத்தை குடிப்பதி
னுல்தான் - இந்த குழாய்களை வைத்திருப்பது எப்படியென்ருல்
ஜனங்கள் அங்கங்கே அந்த ஜலத்தில் உடம்பை கழுவிக்கொண்
டாலும் மறுபடியும் அந்த அழுக்கு தண்ணீர் குழாய்க்குள்பிர
வேசித்து அதிலுள்ள நல்ல ஜலத்தை கெடுக்கக்கூடாமலிருக்கி
றது. சென்னபட்டணத்தில் வாந்திபேதி எந்தெந்த விடங்களில்
எவ்வளவுமட்டில் வியாபித்ததோ அதைக் காட்டுகிற அட்டவணை
இப்போது உங்கள் முன்பாகவிருக்கிறது. அது மிகவும் விநோத
மாயிருக்கிறது. சிவப்புமை யிருக்கிற பாகங்களுக்குக் குழாய்
ஜலங் கொண்டுவந்து விடப்பட்டிருக்கிறது. அவ்விடங்களில்

அவ்வுபாதை மிகவும் குறைந்திருக்கிறது. கறுப்பு மையினல் குறிக்கப்பட்ட விடங்களில் குழாய் ஜலம் விடப்படவில்லை. அந்த விடங்களில்தான் வாந்திபேதி மிகவும் அதிகமான கெடுதியைச் செய்தது. குழாய் ஜலத்தைக் கெடுக்க ஜனங்களுக்கு சாத்திய மில்லை. சாத்தியப்படுமாகில் கெடுத்தேவிடுவார்கள். குழாய் ஜலம் கிடைக்குமிடங்களிலெல்லாம் சகல ஜனங்களும் அதை யே உபயோகித்துவருகிருர்களாகையால் இந்நாட்டில் ஜன சௌக்கியத்துக்குரிய ஏற்பாடுகளைச்செய்து அவைகளை விருத்தி பண்ணக்கூடுமென்கிற நம்பிக்கை எனக்குண்டாயிருக்கிறது - சில சமயங்களில் நான் கேட்டிருப்பதை சொல்லுகிறேன். "இந்த ஜனங்களைத் திருத்த பிரயத்தினப்படுவதில் உபயோக மில்லை. அவர்களுக்கு சில துர்வழக்கங்களும் ஆசாரங்களுமு ண்டு. அவர்களுக்கென்னபுத்தி சொன்னபோதிலும் அவைகளை யவர்கள் மாற்றமாட்டார்கள்." இப்படி சொல்வது கொஞ்சம் கூட சரியல்ல. இங்கிலாந்து தேசத்தில்கூட ஆதியில் தேக சௌக்கியத்திற்குரிய ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கிய போது இதேவிதமான விரோதங்களிருந்தன. இன்னமும் அவ் விடத்தில் அநேக சங்கதிகளில் இவ்வித விரோதங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. லண்டன் முதலிய பெரிய பட்டணங்க ளில் சுவல்பகாலத்திற்கு முன்வரையிலும் ஜனங்களுக்கு ஜலம் கிடைப்பதற்குள்ள ஏற்பாடு மிகவும் இகழத்தக்கதாயிருந்தது. இப்போதுகூட அது மெச்சிக்கொள்ளத்தக்கதாயில்லை. உண் மையாகவே லண்டன் நகரத்தில் அநேக பாகங்களில் நல்ல ஜலங் கிடைப்பது துர்லபமாயிருக்கிறது. எங்களுடைய மகாராச் சியத்தின் இராஜதானியில் மகா ஜனங்களுடைய அபிப்பிரா யம் மிகவும் வலிவுள்ளதாயிருந்தாலும், அது அந்தப் பட்டணத் தாருக்கு எவ்விதமான ஜலத்தையாகிலும் கொடுக்கும்படி குத் தகை எடுத்திருக்கும் கம்பெனியார் மௌனமாகச் செய்யும் விரோதத்தை, வெல்லக்கூடவில்லை. புழலேரி ஜலத்தை குழாய் வழியாய்க் கொண்டுவருவதற்காக முதலில் பிரஸ்தாபம் நடந்து பின்பு அதை நிறைவேற்றும்போது நான் கேள்விப்பட்டது என க்கு நினைவுக்குவருகிறது "அது உபயோகமில்லை நீங்களதைக் கொண்டுவந்துவிட்டபோதிலும் அதை ஜனங்கள் உபயோகித்துக் கொள்ளமாட்டார்கள்" என்று சிலர் சொன்னார்கள். அப்போது கவர்னராயிருந்த லார்ட்டு நேப்பியரவர்கள் இவ்விஷயத்தில் மிக்க கவலையுள்ளவராயிருந்தார் அப்போது நான் அவர் சமீ பத்திலிருக்கும் உத்தியோகஸ்தர்களி லொருவனுகவிருந்தேன். இத்தேசத்தின் ஜனங்களுடைய க்ஷேமத்தைப்பற்றிய எல்லா கா ரியங்களிலும் அவருக்கு எவ்வாறு சிரத்தையிருந்ததோ அவ் வாறுகவே இந்த புழலேரி ஜலம் விஷயத்திலும் சிரத்தையுள் ளவராயிருந்தார். கல்கத்தாவில் கவர்னர் ஜனரலாயிருந்து திரு ம்பி தனது தேசத்துக்குப் போகும்பொழுது வழியில் இந்த சென்னபட்டணத்திலிறங்கி குழாய் கட்டடவேலைகள் முடிந்தி ருந்தபடியால் அதின் ஜலத்தை ஜன உபயோகத்துக்கு தன் கையினல் முதலில் திறந்துவிட்டு போனார். அப்படிசெய்த மறு தினம் அவர் சொன்னதாவது "நல்லது நாமவர்களுக்கு நல்ல ஜலத்தை கொடுத்திருக்கிறோம் அதை யவர்கள் உபயோகப்



படுத்திக்கொள்வார்களா! அவர்கள் உபயோகப்படுத்திக்கொள் ளுவார்களென்றே கோருகிறேன். ஆனல் நான் கேள்விப்பட் டதில் அவர்கள் அந்த ஜலத்தை உபயோகப்படுத்திக்கொள்ள மாட்டார்களோ என்னமோவென்று அச்சப்படுகிறேன்." இப் படியிருந்த காலம்போய் அந்த சந்தேகங்களெல்லாம் இப் போது நிவர்த்தியாய்விட்டதல்லவா. ஜனங்கள் அதிகம் போ க்குவருத்தாயுள்ள வொரு பெரிய வீதியிலிருக்கிற குழாய்களில் ஒன்றுக்கு சமீபத்தில் நின்றால் எல்லா ஜாதிக்காரரும் அந்த ஜலத்தை உபயோகிப்பதையும் அதை எல்லாரும் அதிக மே ன்மையா யெண்ணியிருப்பதையும் பார்க்கலாம். இப்போது குழாய் ஜலமெடுக்க எத்தினையிடங்கள் ஏற்பட்டிருக்கின்றன வோ அவைக்கு இரட்டித்தனை யிடங்கள் ஏற்பட்டாலும் அவை களும் ஜனங்கள் உபயோகத்துக்கு வேண்டியிருக்கும். நான் மேலே சொல்லியபிரகாரம் சிரேஷ்டமான ஜலம் ஜனங்களு க்கு கிடைத்திருக்கிறபடியாலும் அதை கெடுக்க அவரால் முடி யாதானபடியாலும் சென்ற தடவை வாந்திபேதி வந்தபோது சென்னபட்டணம் அதில் நின்று தப்பித்துக்கொண்டது. இப்ப டிக்கன்றி வாந்திபேதிக்கு அவசியமான காரணம் அழுக்குமாத்தி ரமேயாயின் சென்னபட்டணத்தின் ஜனங்கள் மிகவும் வருத்தத் தையடைந்திருப்பார்கள். இதுபோலவே குண்டூர் நகரமும் நம க்கு தைரியத்தை யுண்டாக்கும் ஸ்திதியிலிருக்கிறது. அநேகவ ருஷங்களுக்கு முன்குண்டூர்நகரமானது, பினியன்ஸ் 'ஜாதிக்காரர் கள் பேச்சுபடிக்கு, ஒருவிதமான "சிரோமத்தியஸ்தானமாய்" இ ருந்தது. பங்காளமோ அவ்வியாதிக்கு கஸ்பா அல்லது பிரதான ஸ்தலமாக வெகுகாலமாயிருந்துகொண்டிருக்கிறது. அது சற் றேறக்குறைய எல்லா காலத்திலும் குண்டூரிலேயே குடிகொண் டிருந்தது. சானிடெரி கம்மிஷனரவர்களுடைய 1879ளுப்த்திய ரிபோர்ட்டில் அந்த பட்டணத்தில் நடந்துவந்ததைப்பற்றி அன ங்கஸ்ட் பாதிரியாரவர்கள் சொல்லியிருப்பதை நீங்கள் வாசித் தால் அம்மாதிரியாகவிருந்ததற்கு நீங்கள் ஆச்சரியப்படமாட் டீர்கள். உடனே மேற்படி பட்டணத்திற்கு டாக்டர் பிரிக்விதர் என்பவர் வந்தார். அவர் முனிசிபாலிடிக்கு வைஸ் பிரசிடென் டாக நியமிக்கப்பட்டார். அசுத்தங்கள் நெடுநாளாய் குவிந்தி ருந்த அந்த ஊரை சீர்படுத்தத் தொடங்கினார். உடனே அவ ருக்கு பலமான விரோதிகளுண்டாய் அவர்பேரிலில்லாததெல் லாம் சொல்லி அவரை நிந்தித்தார்கள். எல்லா தேசங்களி லும் ஜனங்கள் தங்களுக்குள் எவன் மகா விவேகியாயும் நல்ல வுபதேசங்களைச் செய்யத்தக்கவனுயுமிருக்கிருனே அவன்பே ரில் சீறி அவனை கல்லாலடிக்க விரும்புவது மனிதர்களுக்கு விலக்கவொண்ணுத சாமான்னிய குணமாயிருக்கிறது. டாக்டர் பிரிக்விதர் என்பவர் இதையெல்லாம் சகித்துக்கொண்டு சோர் வில்லாமல் முயன்றுவந்தார். பாட்டைகளையும் சந்துகளையும் சாக்கடைகளையும் வீடுகளையும் சுத்திபண்ணுகிறதைப்பற்றியும் சப்பாத்துக்கள்ளரியை யெடுத்துப்போடுவதைப்பற்றியும் நியந் தனைகளை யேற்படுத்தினார். எல்லாத்துக்கும் மேலாக ஜனங்க ளுக்கு உபயோகமாகும் ஜலத்தை முக்கியமாக பாதுகாத்துவந் தார். இவ்விஷயத்தைப்பற்றி யவர் சொன்னதை நான் படிக்

கிறேன். அவர் வருவதற்குமுன் "குளங்களிலும் தடாகங்களிலும் கிணறுகளிலும் உள்ள ஜலத்தை பரிசுத்தமாய் வைத்து வைக்கவேணுமென்பதை யாரும் கவனிக்கவில்லை. 1870ஞ டிசம்பர்மீ௴த்தில் நானிவடம் வந்தபொழுது இந்த ஊர் ஜனங்கள் ஜலத்தை எல்லாவிடங்களிலும் அசுத்தப்படுத்திக்கொண்டிருந்ததை பார்க்க எனக்கு ஆச்சரியமாயிருந்தது அவர்கள் முக்கியமாய் தடாகங்களிலிருந்த ஜலத்தை இவ்வாறுசெய்துகொண்டிருந்தார்கள் ஜனங்கள் காலையிலெழுந்தவுடனே தடாகங்களுக்குபோய் அதில் வாயை கொப்பளித்தும் வாயிலுள்ள அழுக்கு ஜலத்தை அதில் உமிழ்ந்தும் அழுக்கான துணிகளை துவைத்துக்கொண்டும் ஸ்நாநஞ்செய்துகொண்டும் மற்றும் அருவருப்பான காரியங்களை நடத்திக்கொண்டுமிருந்தார்கள். இவ்வித நடவடிக்கைகளை அதிகாரிகள் தடுக்கவேண்டியதாயிருந்தது. மழைகாலத்திற் குளத்தின் கரையின்மீதும் வெய்யிற்காலத்தில் குளத்தினுள்ளிலும் சகல ஜனங்களும் ஜலபாதைக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். விவேகியான பிராமணனும் மூடனான பறையனும் சர்க்கார் உத்தியோகஸ்தனும் ஏழை கூலியாளும் யாவரும் தங்களுக்கு பானத்துக்குபயோகமாகிய ஜலத்தைத் தருகிற குளங்களை இவ்வாறு அசுத்தப்படுத்திக்கொண்டிருந்தார்கள். அப்பட்டணத்திலுள்ள அநேகங் கிணறுகளுக்கு கைப்பிடிச்சுவர் கிடையாது. அதினால் அவைகளில் ஸ்நாநம்செய்வதற்காகவும் விழுப்புத் துணிகளை துவைக்கவும் போகிற ஜனங்களில் முக்கியமானவர்களாகிய கோமுட்டி ஸ்திரீகள் பிராம்மண ஸ்திரீகள் - இவர்களுடைய உடம்பிலும் புடவைகளிலுமுள்ள அழுக்குகள், கீழே விழுகிற ஜலத்தோடு அக்கிணற்றில்தானே வழிந்துவிழும். வாந்திபேதியுள்ள காலத்தில் அந்த பேதிக் கறைபட்ட துணிகளைக்கூட இந்தக் கிணறுகளண்டையே கழுவிவந்தார்கள். ஆகையால் விஷத்துக்குச் சமானமான அந்த அசுத்தங்கள் ஜலத்தில் கலக்கப்பட்டு அந்த ஜலத்தை அநேக ஆயிரம் ஜனங்களும் குடித்தார்கள். இப்பொழுது ஜலம் எடுத்துக்கொண்டுபோவதற்கும் மற்ற வேலைகளுக்கும் வருகிற ஜனங்களால் மேற்குறித்தவிதமான அழுக்குகள் உண்டாகாமலிருக்கும்படி பார்த்துக்கொள்வதற்கு முனிசிபாலிடியாரால் காவற்காரர்கள் வைக்கப்பட்டு குளங்களும் தடாகங்களும் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு ஸர்ஜன் பிக்விதர் ஆரம்பித்த நல்ல ஏற்பாடுகளை, யவருக்கு பின்வந்த டாக்டர் டிரல் நிறைவேற்றி அவைகளை விருத்தியும்செய்தார். இப்பொழுது மேற்கண்டபடி விவேகத்துடன் செய்த முயற்சிகளால் உண்டாகிய பயன் என்னவெனில், 1868ம் வருஷம் முதல் குண்டூரில் வாந்திபேதி கிடையாது. அதற்குமுன் நம்முடைய சென்னபட்டணம் இராஜியத்தில் வாந்திபேதி கண்டால் குண்டூரில் அது பிரவேசியாமல்போகாது. அவ்விடத்திலேயே அது குடிகொண்டிருந்தது - உங்கள் தேசத்து ஜனங்கள் நம்புகிறபடி வாந்திபேதி ஒரு தேவதையாகவிருந்தால், அவளுடைய சக்தியையும் அதிகாரத்தையும் இவ்விதமாக குறைப்பதற்கு முயன்ற அந்த டாக்டர்களை அப்பொழு



தே அவள் கொன்றுவிட்டிருப்பாளல்லவா. அப்படியன்றி ஒரு டாக்டரால் வெல்லப்பட்டவள் மிகவும் துர்ப்பலமான தேவதையாயிருக்கவேண்டும் - எப்படியிருந்தபோதிலும் அவள் டாக்டர்களால் இவ்வாறு வெல்லப்படும்பக்ஷத்தில் நாம் அவளை விட்டுவிட்டு டாக்டர்களோடேயே சேரலாம் - அல்லது அவளுக்குப்பதிலாய் பரிசுத்தமாகிற தேவதையை யடைவோம். அந்த தேவதையைத்தான் புதிதாக ஜனங்கள் தொழுவேணுமென்பது என் கோரிக்கை - நம்முடைய வீடுகளையும், சாக்கடைகளையும், நம்மைச் சுற்றிலுமுள்ள எல்லாவற்றையும் பரிசுத்தமாக வைத்துக்கொள்ளுவோம். எல்லாவற்றிற்கும் மேலாய் நமக்குவேண்டிய ஜலத்தில் அசுசியாவது கெடுதலாவது சேராமல் பார்த்துக்கொண்டும் நம்மாற் கூடியவரையில் அவைகள் சேருவதற்கு இடம்கொடாமலுமிருக்கவேண்டும். அதின்பேரில் தைரியசாலிகளைப்போல் நம்முடைய இயற்கை யறிவிற்கும் விவேகத்துக்கும் எட்டினமட்டில் செய்யவேண்டியவைகளை செய்துவிட்டு, அட்டிஸன் என்கிறவர் செய்த பேர்பெற்ற நாடகத்தில் "ஜயத்தை மனிதன் தன் பிரயத்தினத்தாலேயே சம்பாதிக்க வல்லமையுள்ளவனல்ல - மேலும் மேலும் முயற்சிசெய்து அதை நாம் அடையத்தக்க யோக்கியதையைமாத்திரம் பெறவேணும்" என்று சொல்லியிருக்கிறதை மனதிற்கொண்டு, நமக்கு சத்துருக்களாகிய வாந்திபேதி முதலிய மகா வியாதிகள்வந்தால் வரட்டும் பார்ப்போமென அமரிக்கையுடன் உட்கார்ந்துகொண்டு காத்திருக்கலாம்.

## சென்னபட்டணத்தைச்சேர்ந்தவிடங்களில் வாந்திபேதியினாலுண்டான மரணங்கள்.

### இடங்களின் பேயர்.

| | இடங்கள் | மரணங்கள் |
|---|---|---|
| புழல் ஏரிஜலம் உபயோகப் படாதவிடங்கள். | தண்டயார்பேட்டை | 48 |
| | வண்ணாரப்பேட்டை | 57 |
| | இராயபுரம் | 88 |
| | காசிமேடு | 54 |
| | மருந்துகிடங்கு | 1 |
| | பெரம்பூர் | 4 |
| | வியாசர்பாடி | 2 |
| | ஆள்வார்பேட்டை | 0 |
| | சேத்துப்பட்டு | 0 |
| | நுங்கம்பாக்கம் | 2 |
| | கிரஷ்ணம்பேட்டை | 2 |
| | மயிலாப்பூர் | 23 |
| புழல் ஏரிஜலம் உபயோகப்படும் இடங்கள். | ஜான் பேரோர்தோட்டம் | 0 |
| | பெத்துநாயக்கன்பேட்டை | 25 |
| | முத்தியாலுபேட்டை | 52 |
| | அட்டபாளையம் | 0 |
| | கோட்டை (ஏழுகிணற்றுஜலம் இடைக்கிடை உபயோகப் படுகிறது) | 0 |
| | பெரியபறச்சேரி | 0 |
| | சூளை | 1 |
| | புரசபாக்கம் | 6 |
| | பெரியமேடு | 1 |
| | திருடவன் அல்லது புதுபறச்சேரி | 5 |
| | வேபேரி | 2 |
| | புதுப்பேட்டை | 0 |
| | எழும்பூர் | 2 |
| | கோமலேசுவரபுரம் | 2 |
| | இராயபேட்டை | 7 |
| | மீர்சாயபுபேட்டை | 3 |
| | சேப்பாக்கம் | 0 |
| | மக்கீதோட்டம் | 1 |
| | புதுப்பாக்கம் | 6 |
| | சிந்தாதிரிபேட்டை | 9 |
| | நரசிங்கபுரம் | 1 |
| | திருவல்லிக்கேணி | 30 |
| | திருவட்டீசுவரன்பேட்டை | 0 |
| | தேனாம்பேட்டை | 0 |



## 1855௵முதல் 1881௵வரை சென்னபட்டண நகரத்தில் வாந்திபேதியினால் சம்பவித்த மரணங்களை காட்டும் கணக்கு.

| வருஷங்கள். | வாந்திபேதியினால் சம்பவித்த மரணங்கள். | ஷரா. |
|---|---|---|
| 1855 | 1956 | |
| 1856 | 805 | |
| 1857 | 1378 | |
| 1858 | 1965 | |
| 1859 | 1082 | |
| 1860 | 2580 | |
| 1861 | 2776 | |
| 1862 | 3635 | |
| 1863 | 1684 | |
| 1864 | 574 | |
| 1865 | 944 | |
| 1866 | 2984 | |
| 1867 | 614 | |
| 1868 | 13 | |
| 1869 | 568 | |
| 1870 | 861 | |
| 1871 | 493 | |
| 1872 | 5 | |
| 1873 | 6 | |
| 1874 | 0 | |
| 1875 | 879 | க்ஷாமகாலம். |
| 1876 | 2035 | |
| 1877 | 6246 | |
| 1878 | 64 | |
| 1879 | 34 | |
| 1880 | 2 | |
| 1881 | 123 | 1881௵ கடைசிபாகம் அக்டோபர்மாதம்முதல் டிசம்பர்மாதம்வரை. |

Pab:

f°. 24-189:

N 83 he: